புதுச்சேரி அரசு
துணை ஆணையர் (கலால்) அலுவலகம்

புதுச்சேரி, நாள் 4.05.2011

## பத்திரிகை செய்தி குறிப்பு

புதுச்சேரி சட்டப்பேரவை தேர்தலில் பதிவான வாக்குகள் எண்ணிக்கை 13.05.2011 அன்று நடைபெற உள்ளது.

மேற்கண்ட வாக்கு எண்ணிக்கை அமைதியாகவும் ஒழுங்காகவும் நடைபெற வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு புதுச்சேரி ஆட்சிப் பரப்பில் உள்ள புதுச்சேரி பகுதிகளில் இயங்கி வரும் அனைத்து கள்ளு, சாராயம் மற்றும் பார் உட்பட அனைத்து வகை மதுக்கடைகளும், மது அருந்தும் வசதியுள்ள உணவகங்கள் ஆகியவைகளும் 13.05.2011 அன்று மூடப்பட்டிருக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்கூறிய நாளில் எந்த இடத்திலாவது மது விற்பனைச் செய்தல், மதுவைச் சட்ட விரோதமாக வைத்திருத்தல், பொது மக்களுக்கு வழங்குதல் மற்றும் மது வகைகளை எடுத்துச் செல்லுதல் ஆகியவை முற்றிலுமாகத் தடை செய்யப்படுகின்றது. இதனை மீறுபவர்கள் மீது புதுச்சேரி கலால் சட்டம் மற்றும் விதிகள் 1970ன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

Office of the Deputy Commissioner (Excise)
PUDUCHERRY

R. அன்பழகன் 4/5/2011.
(R. அன்பழகன்)
துணை ஆணையர் (கலால்)

பெறுநர்
அனைத்து பத்திரிக்கையாளர்கள்